# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ருசுகூ | திருவள்ளுவர் யாண்டு உ௰௬சு இராட்சச, கார்த்திகை (1975 — நவம்பர் — டிசம்பர்) | மலர் அ |
| --- | --- | --- |

## அகத்திணை மரபுகள்

இராம சுப்பிரமணியன், M A, B. G L., B Lib Sc.
4-B. தீத்தாரப்ப முதலி தெரு.
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

### முன்னுரை

அகப்பொருள் என்பது, மக்களது உள்ளத்து உணர்ச்சியாகிய இன்ப அன்பின் வயப்பட்ட குடும்ப வாழ்க்கை பற்றிய செய்திகளைக் கூறுவது ஆகும். இதனை எடுத்துரைக்கும்போது, ஒருவனுக்கும். ஒருத்திக்கும் இடையே ஏற்படும் அன்பும், அது பற்றிய உணர்ச்சிகளும், நிகழ்ச்சிகளும் விளக்கிக் கூறப்படும். இன்ப நுகர்ச்சி, அதனை நுகர்ந்த ஒருவனும் ஒருத்தியும் ஆகிய இருவரின் உள்ளங்களுக்கு மட்டுமே புலனாதலால், இது அகம் எனப் பெயர் பெற்றது. இவ் வின்ப நுகர்ச்சி பிறர்க்குப் புலனாகாமல், மறைக்கத் தக்கது ஆதலால், இது அகம் எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர். புறப்பொருள் என்பது, அறம் செய்தலும், பொருள் ஈட்டுதலும், போர் புரிதலும் முதலிய சமுதாய வாழ்க்கை பற்றிய செய்திகளைக் கூறுவது ஆகும். இது பிறர்க்குப் புலனாதலின், புறம் எனப் பெயர் பெற்றது இது பற்றிய உணர்ச்சி. பிறர்க்குக் கூறத்தக்கது ஆதலால், இது புறம் எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

### அகம் — புறப்

உலக வளர்ச்சிக்கு அன்பின் தொடர்பு இன்றியமையாதது. அந்த அன்பானது இரண்டு உயிர்களின் தனித்த நிலையில் உண்டாவதன்று; இரண்டின் கூட்டுறவால் நிகழ்வதாகும். அன்பில்லாத உயிர் வாழ்க்கை வன்னிலத்தில் பட்ட மரத்தை ஒப்பதாகும் மேலும் அறம் நிலை பெறுதற்கும் அன்பின் சார்பு வேண்டும். அன்பின் முதிர்ந்த நிலையே அருள். அன்பே

கடவுள் என்பர் ஆன்றோர். அத்தகைய அன்பென்னும் நல்வித்தானது முளைத்து வளர்ந்து முழுமரமாகிப் பயன் தருதற்கு நிலைக்களமாக இருப்பது இல்வாழ்க்கை. இல் வாழ்க்கை அன்பும் அறமும் உடைய நல்வாழ்க்கையாக நடைபெறுமாயின் அதனைவிடச் சிறந்த பேறு வேறொன்றுமில்லை. இல்வாழ்க்கை நடைபெறுதற்குக் கணவன் மனைவி இருவரும் ஒத்த அன்புடையராதல் வேண்டும். இல்லையேல், அவ்வாழ்க்கை ஒரு நெறிப்பட்டு நடைபெறாது. இல்லற வாழ்வில் தலைப்படும் ஒருவன் ஒருத்தியென்னும் இருவருடைய உள்ளங்களில் தோன்றும் ஒத்த அன்பின் விளைவாகிய உணர்ச்சிகளையும் அவ்வுணர்ச்சிகள் ஒற்றுமைப்பட்ட நிலையில் அவர்கள் எய்தும் இன்பப் பேற்றினையும், பின்னர் திருமணம் செய்துகொண்டு நடத்தும் மனையறங்களையும், உலகியல் இன்பங்களைத் துய்த்துக் கழித்த பின் அவர்கள் உள்ளத் துறவு மேற்கொண்டு ஒழுகும் இயல்பினையும் உள்ளவாறு எடுத்துக் கூறுவதே அகப்பொருள்பற்றிக் கூறுவதாகும்.

## மரபு என்பது என்ன ?

மரபு என்பது எவ்வாறு, எதிலிருந்து தொடங்குகின்றது? ஏதேனும் ஒரு முறை முதலில் உருவாகிய பின் வழக்கத்தில் நிலைத்து விடுகின்றது. அவ்வாறு வழங்கி, வழங்கி நிலைபெற்று விடுகின்ற ஒன்றைத்தான் மரபு என்று குறிக்கின்றோம். கவிதைத் துறையில் மரபு என்பது என்ன? உள்ளத்தே எழுகின்ற உணர்ச்சியானது சொல்வடிவாகிய ஆடை புனைந்து வெளிவருகின்றது. அவ்வாறு உணர்ச்சிக்கு வாய்க்கின்ற கோலமே கவிதைத் துறையில் மரபு என நிலைபெறுகின்றது.[1] சங்கப் பாடல்களின் மரபு சங்க காலத்துச் சமுதாயத்துக்கு உருவம் கொடுக்கும் வார்ப்படமாக அமைந்துள்ளது; அவ் வுருவத்துக்கு அழகு ஊட்டுவதும் அம் மரபுதான். இயற்கையிலும் மனித உணர்ச்சியிலும் விரவிக் கிடக்கும் அழகினைக் காண்பதிலும், உணர்வதிலும் பண்டைப் புலவர்கள் செய்த வெற்றிகரமான முயற்சியைச் சங்க காலச் செய்யுள் மரபு நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. சங்க கால மரபு இப்போது வழக்கில் இருக்கின்றதோ இல்லையோ, அதுபற்றிக் கவலைப்படாமல் — அக்காலத்தின் மரபு இது எனப் புரிந்துகொள்ளாவிடில் சங்க இலக்கியப் பாடல்களில் இன்பம் காண இயலாது. "குறிஞ்சி" என்று சொல்லியவுடனே சில காட்சிகள் நம் மனத்தில் எழுகின்றன. ஓங்கிப் பரந்திருக்கும் மலைச் சாரல்,

1 Lowes: Convention and Revolt in Poetry, P. 32

ஆங்காங்கே வளைந்து நெளிந்து பாய்ந்தோடும் ஆறுகள், தலைவியைத் தேடித் தலைவன் எவ்விதத் துன்பத்தையும் பொருட் படுத்தாது நள்ளிரவிலே வேட்கையோடு வரும் பெருமிதத் தோற்றம் ஆகிய இவையெல்லாம் "குறிஞ்சி" என்ற சொல்லைக் கேட்டவுடன் நம் உள்ளத்தில் ஓவியக் காட்சிகளாக விரிகின்றன. குறிப்பிட்ட அச் சொல்லைக் கேட்டவுடன் இயற்கைக் காட்சிகளும் மனிதனின் உணர்ச்சியை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளும் எழுகின்றனவெனின், அதற்குக் காரணம் யாது? குறிஞ்சித் திணைக்கு எனப் பண்டைப் புலவர்கள் சில மரபுகளை ஏற்படுத்திப் பாடினர். மலையும் மலைசார்ந்த இடமும் இயற்கை தரும் சூழ்நிலை; புணர்தலும் புணர்தல் நிமித்தமும் மனித உணர்ச்சி தரும் சூழ்நிலை. இவ்விரண்டையும் பிரிக்க முடியாதவாறு இணைத்துக் குறிஞ்சித் திணைக்குரிய புலனெறி வழக்கத்தை மரபாக்கினர் இவ்வாறே ஏனைய திணைகளுக்குரிய மரபுகளும் உருவாயின. குறிப்பிட்ட ஓர் இயற்கைக் காட்சியுடன் குறிப் பிட்ட மனித அனுபவம் பிணைக்கப்பட்டது; அதன் விளைவாக, அதே காட்சி வரும்போதெல்லாம் முன் குறிப்பிட்ட அதே மனித உணர்வும் தானே மனத்தில் எழுகின்றது. இவ்வாருக, நாளடைவில் இயற்கைக் காட்சிகளின் கூறுகள் ஒவ்வொன்றும் மனித உணர்வுகளின் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றவகையில் அமைந்து விட்டன மரபுகள் நிலையாக ஊன்றிய வரலாறு இதுதான்,

## ஐந்திணை

சங்க காலத்தின் இயல்பினைச் சுருக்கமாகச் சுட்ட வேண்டுமாயின் இதயங் கவரும் தீஞ்சுவைப் பாடல்கள் இசைத்த பறவைகளின் உறைவிடம் என்று கூறலாம். சங்க காலத்தில் வாழ்ந்த பண்டைத் தமிழ்க் கவிஞர்கள் நிலப்பரப்பு, அதிலுள்ள இயற்கைக் காட்சி, பருவ காலங்கள் ஆகியவை மனிதனுடைய வாழ்க்கையைப் பாதிக்கின்றன என்பதை உன்னிப்பாக நோக்கி உணர்ந்திருக்கின்றனர்; குறிப்பிட்ட ஒரு நிலப் பரப்பின் பருவ நிலைக்கும் இயற்கை வளத்துக்கும் ஏற்றவாறு அதே நிலப் பகுதியில் வாழும் மனிதர்களுடைய ஒழுக்கமும் ஒழுகலாறும் அமைகின்றன இயற்கையின் சூழல் மனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் மாறுதல்கள் வெளிப்படையாகத் தெரிவதில்லை. ஆயினும். மிக நுண்ணிய முறையில் எவ்வாருே மனிதனின் உள்ளத்தைக் கவர்ந்து அவனுடைய வாழ்க்கையின் போக்கு அமைவதற்கான மூல காரணமாக இயற்கை அமைகின்றது இவ் வுண்மையைப் பண்டைக் காலத்துப் புலவர்கள் உணர்ந்திருந்தனர் என்பதைச் சங்க இலக்கியம் தெரிவிக்கின்றது.

தம் காலத்துக் கலையுலகின் விதிகளை வகுக்கப் புகுந்த தொல்காப்பியர் தமக்கு விதி வகுக்கும் முறையை விளக்கியன எவை என்பதைக் குறிப்பிட்டுள்ளார். அகப்பொருட்குச் சிறந்த ஐந்திணைகளின் பாகுபாடு குறித்து,

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை [2]

என அவர் விதி கூறினர். இச்சூத்திரத்தில் அகனைந்திணையின் மூன்று பிரிவுகள் எவை என்பது விளக்கப்படுகின்றது. முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்று பிரிவுகளை உடையது என்று விதிக்கின்றது இச்சூத்திரம்

முதல், கரு, உரி என்னும் மூவகைப் பொருளையும் திணை யென்ற சொல்லால் வழங்குவர் ஆசிரியர். காட்டில் முல்லையும் மலையிற் குறிஞ்சியும் வயலருகே மருதமும் கடலருகே நெய் தலும் வளர்தல்பற்றி அந் நிலங்களை முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் பூக்களாற் பெயரிட்டு வழங்கினர் பாலை என்பதற்கு நிலமில்லையாயினும் வேனிலாகிய காலம்பற்றி வருதலின், அக்காலத்துத் தளிரும் சினையும் வாடாமல் நிற்கும் பாலையென்னும் பெயருடைய மரம் உண்டாகலின் அச்சிறப்பு நோக்கிப் பாலையென்று பெயரிட்டார், கைக்கிளை பெருந்திணை என்பனவற்றுக்கு நிலமும் காலமும் பகுத்தோதாமையின் பிறி தோர் காரணம் பற்றிப் பெயரிட்டார். காடும் மலையும் ஊருங் கடலுமாகிய நானிலப் பகுதிகளும் அவற்றின் திரிபாகிய பாலை யும், தம்பாற் சிறந்து வளரும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய் தல், பாலை என்னும் பூக்களாற் பெயர் பெறுதலால் அவ்வந் நிலத்திற்குச் சிறந்தியைந்த இருத்தல், புணர்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்னும் அகவொழுக்கங்களும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என அவ்வந் நிலத்திற்குரிய பூவின் பெயர்களே கொள்வனவாயின. முல்லை குறிஞ்சி, மரு தம், நெய்தல் என்பன முறையே இருத்தல், புணர்தல், ஊடல் இரங்கல் என்னும் ஒழுக்கத்தைக் குறித்த பெயர்களென்றும் இவ்வொழுக்கத்தின் பெயர்களே இவை நிகழும் நிலத்திற்கு ஆயின வென்றுங் கருதுவர் நச்சினார்க்கினியர். அவ் ஐந்து நிலங்களில் சிறப்பாக வளரும் பூவின் பெயர்களே அவை தோன்றி வளரும் நிலத்திற்கும் அந்நிலத்தில் சிறப்புரிமை யுடையதாய் நிகழும் ஒழுக்கத்திற்கும் ஆகுபெயராய் வழங்கின என்று கொள்வதே ஏற்புடையதாகும். இதனையே தொல் காப்பியர்,

---

2. தொல். பொருள் — 3.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றுஇவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே [3]

என்று குறிப்பிட்டிருக்கின்றார்,

## பெயர் சுட்டாமை

மக்களிலக்கியமாகிய காதல் பாட்டுக்கள் இன்னாருடைய காதல் என்று ஆளைக் குறிப்பிடாமல், பொதுவாக எல்லோரும் கற்பனை செய்து உணரத் தக்க வகையில் யாரோ ஒருவன் ஒருத்தியின் காதல் வாழ்வு எனப் பாடப்பட்டு வழங்கின. ஆனால் வீரமும் கொடையும் எல்லோர்க்கும் பொதுவான கற்பனையாக நிற்க இயலாமையால், குறிப்பிட்ட இன்ன தலைவனுடையன என்று சுட்டிப் பாடும் மரபு இருந்தது. இன்னருடைய காதல் என்று பெயர் குறித்து ஊர் நடுவே பாடித் திரிய முடியாது. ஆனால் இன்னவனுடைய வீரச் செயல் என்றும், இன்னவன் கொடைச் சிறப்பு என்றும் பாடித் திரிவது பெருமையாகவும் பாராட்டாகவும் இருந்தது. மக்களிலக்கியத்தில் இருந்த இந்த மரபுகளே புலவர்களின் இலக்கியத்திற்கும் பொருந்துவனவாகக் கொள்ளப்பட்டன

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்
புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே [4]

என்று தொல்காப்பியனார் வகுத்த காலத்திலேயே அந்த மரபுகள் இலக்கியத்தில் வேரூன்றியிருந்தன என்று தெளியப் படுகின்றது

சங்க இலக்கியத்தில் புறத்திணைப் பாட்டுக்களில் அத்தகைய பொதுவான கற்பனை இல்லை. இன்ன வேந்தன் இன்ன இடத்தில் இன்ன காரணம் பற்றி நிகழ்த்திய போர் பற்றியது; இன்ன வள்ளல் இன்னார்க்குத் தந்த கொடை பற்றியது, என்ற வரலாற்றுக் குறிப்புக்கள் புறத்திணைப் பாட்டுக்களுக்கு உள்ளன பொதுவான ஒரு கற்பனைத் தலைவனைப் படைத்து அவனுக்கும் கற்பனைப் பகையரசனுக்கும் நடந்த போர் என்ற முறையில் புறப்பாட்டு இல்லை புறநானூறு முதலிய சங்கப் பாட்டுக்கள், நிகழ்ந்த நிகழ்ச்சிகளை — வரலாற்றுக் குறிப்புக்

3. தொல். அகத்திணை — 16.
4 தொல் அகத்திணை — 57.

களை — உணர்ச்சியுடனும் சிற்சில இடங்களில் சிறிது உயர்வு நவிற்சியுடனும் எடுத்துரைப்பனவாக உள்ளன. அவற்றுள் சிலவற்றில் கற்பனை நயமும் கலந்துள்ளது எனினும், அவற்றுள் கூறப்படும் நிகழ்ச்சிகள் கற்பனை அல்ல; புகழப்படும் மாந்தரும் கற்பனை மாந்தர் அல்லர் 'புறப்பொருள் உலகியலானன்றி வாராமையின் அது நாடக வழக்கம் அன்றாயிற்று'' எனப் பழைய உரையாசிரியராகிய இளம்பூரணர் கூறியுள்ள கருத்து இதனை வலியுறுத்துவதாகும்.

இயற்கையைப் பருவந் தோறும் பொழுது தோறும் ஆராய்ந்து, அந்தந்தப் பருவத்திலும் பொழுதிலும் அந்தந்த நிலப்பகுதிகள் பெறும் மாறுதல்களையும் கண்டறிந்து, இன்ன இன்ன பருவமும் பொழுதும் இயைந்து வருகின்றது என்பதை ''பாடல் சான்ற புலனெறி வழக்கம்'' [5] எனத் தொல்காப்பியனார் போற்றினார்.

## முடிவுரை

இவ்வாறு படைத்துக் கொள்ளப்பட்ட தலைமக்களிடையே புணர்தல் முதலாகக் கூறப்படும் உரிப்பொருள்கள் தக்க சூழலில் நிகழ்வதாகக் கூறுவது அகப்பாட்டு எடுத்துக்காட்டாக, குறிஞ்சியில், அடர்ந்து படர்ந்த செடி கொடிகளின் செறிவும்— அவற்றோடு அருவியில் படிந்து குளிரினில் கனிந்து வரும் மெல்லிய பூங்காற்றும் — பசுமை வடித்துப் பரப்பும் தண்ணிய நிழலும், கலையும் பிணையுமாய் பிடியுங்களிறுமாய் எங்கெங்கும் இணைந்து திரிந்து மகிழுகின்ற காதல் இணைகளும் காதலரின் நெஞ்சில் 'நெருங்கி வரும்' ஆர்வத்தை மீதூரச் செய்வதனால்— புணர்ச்சி யொழுக்கம், தோன்றுகின்றது! காதலர் பிரிவால் நைய்யும் நெஞ்சினர்க்கு நெய்தல் நிலமும் இவ்வாறே ஏற்ற சூழ்நிலையைத் தருவதாக அமைகின்றது. இரவும் பகலும் ஓல்லென்று ஒலி செய்து அயராது ஓலமிடும் கடலும் அமைதியற்றுப் பொங்கி எழுந்தலையும் அலைகளும் — வெறுமையோடிக் கிடக்கும் நுண் மணற் பரப்பும் — தனிமை உயிர்த்துக் கிடக்கும் சூழலும் .. அவலம் கொண்ட நெஞ்சிற்குத் தக்க பின்னணியைத் தருவனவாய் அமைகின்றன. இவை எவ்வெத்திணைக்கண் பாடப்படுகின்றனவோ, அவ்வத்திணைகட்குரிய நிலத்தில் வாழும் மக்களினத்துத் தலைமக்களாகவே மேலே கூறிய தலைமக்கள் குறிக்கப்படுவர். இவ்வகையில் இயலும் தமிழ்ப் பாட்டுக்களின் தமிழ் நெறியாகிய ''அகப் பொருட் மரபுகள்'' உலகிற்குத் தமிழ் வழங்கிய இலக்கியக் கொடைப் பொருளாக நின்று நிலவுகிறது

5. தொல், அகத்திணை — 56.

சென்ற இதழின் தொடர்ச்சி

# "தென்னக மேதையும் சீனத்துச் செம்மலும்"

சி. இராமகிருட்டினன், பி, ஏ., பி. எல்.,

ஆனால் விரும்பத்தகாத வேற்று நாகரீகங்கள் நுழையத் தொடங்கிய காலமாக இருந்தது உடனடியாகப் புதியதொரு நல்ல இயக்கம் தேவைப்படவில்லை என்பது உண்மையென்றாலும், நுழைக்கப்படும் நச்சுக்கொள்கைகள் எதிர்காலத்தில் வலுவடையக் கூடிய சூழ்நிலை தென்பட்டது. அன்று தமிழகத்தை ஆண்ட மாமன்னர்களும் மக்களை வழி நடத்திச் சென்ற மூத்த அறிவுடையோரும், சொல்லேருழவர்களும், கலைவாணர்களும், எதிர்காலம் இருண்டதாக மாறக்கூடிய ஆபத்தை உணர்ந்தார்களா என்பது ஐயப்பாடே அவர்களது சிந்தனை, எண்ணங்கள், செயல்கள், பெருமளவுக்கு அவர்கள் வாழ்ந்த காலத்தை யொட்டியதாகவே இருந்தன. எதிர்காலத்தைப் பற்றியே அவர்கள் சிந்திக்கவில்லை யெனக் கூற முடியாவிட்டாலும், எந்தவளவுக்குத் தேவையோ, அந்த அளவுக்கு எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை வளரவில்லை, நுழைக்கப்படும் நச்சுக் கொள்கைகள், இன்னும், வலுவுடன் நாட்டு மக்களிடையே தூவப்பட்டால், நாட்டின் எதிர்காலம் எப்படி இருக்கும், வரலாறு எப்படி மாறும், இதுவரையிலும் காக்கப்பட்டு வரும் உயரிய பண்பாடுகள் எப்படிச் சிதைவுறும், என்பவைகளை அவர்கள் ஆராய முனையவில்லை. இத்தகைய ஆராய்ச்சியை ஏற்று நடத்த ஒரு மாபெரும் சிந்தனையாளன் தென்னகத்துக்குத் தேவைப்பட்டான். இந்தச் சூழ் நிலையில் தோன்றியவனே, தமிழகம் வான்புகழ் எய்தக் காரணமாக அமைந்த ஒப்பரிய மேதை திருவள்ளுவன்.

வள்ளுவப் பெருந்தகை இரண்டு கோணங்களிலே தமிழகத்தின் மரபையும், புகழையும் ஓங்கச் செய்யும் பொறுப்பை ஏற்றார். தமிழகத்தின் உயரிய பண்பாடுகளையும், நயத்தக்க நாகரிகத்தையும் காக்கவேண்டிய கடமை ஒரு பக்கம், மனித சமுதாயம் முழுமையும் ஒரு குலமாக இயங்கவும், நலமுடன் வாழவும், உலகப் பொதுமறை ஒன்றை உருவாக்கும், பொறுப்பு இன்னொரு பக்கம். இந்த இரண்டு நோக்கங்களையும் செவ்வனே ஒப்புயர்வற்ற திருக்குறள் நிறைவேற்றியிருக்கின்றது.

திருக்குறள், தமிழகத்தின் பண்பாட்டையும், நாகரீகத்தையும், உலகம் ஒன்ருகவும், நலமுடனும் இயங்கவேண்டிய பல அடிப்படை உண்மைகளையும், மிக அழகாகவும், செம்மையாகவும் இணைக்கின்றது. குறளால் வள்ளுவப் பெருந்தகையின் காலத்துக்குப் பின்னரும், தமிழ் நாகரீகம் காக்கப்பட்டு வருகின்றது. தமிழ்ச் சமுதாயம் தலை நிமிர்ந்து நிற்க முடிகின்றது.

வள்ளுவப் பெருந்தகை மறைந்து சிறிது காலத்துக்குள்ளாகவே வேற்றுக்கொள்கைகளின் பிடிவலுவடைய ஆரம்பித்தது. நாட்டுச் சிதைவைக் காட்டிலும், நாகரீகச் சிதைவு மிகுதியானது. கே கே பிள்ளை, டாக்டர். ராசமாணிக்கனர் நீலகண்ட சாத்திரியார் போன்ற வரலாற்று ஆசிரியர்கள். அந்நியர்களின் பிடிப்பால் ஏற்பட்ட நாகரீகச் சிதைவை தமிழகத்தின் இருண்ட காலம் என்றே வர்ணிக்கின்றனர். திருக்குறள் நெறிமுறைகளை மக்கள் முன் வைத்து, வேற்றுவரால், மக்கள் திசை திருப்பப் படாமல் காக்கப்பட வேண்டியதருணம் வந்தது. ஆனல் மணிமுடிதரித்த மன்னர்களும். நுண்மாண் நுழை புலமிக்க புலவர்களும், நல்ல தருணத்தைப் பயன்படுத்தத் தவறியதோடு இல்லாமல், தாங்களே மாற்ருர் காட்டிய வேறு திசையில் செல்ல ஆரம்பித்தனர். தமிழ்த்தென்றல் திரு வி. க. "திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்" என்ற நூலுக்குத் தாம் அளித்த அணிந்துரையில், திசை தவறிப் போனதை மிக வேதனையுடன் குறிப்பிடுகின்ருர். "வீட்டைப் பற்றிய தனி நூல்கள் பின்னல் தோன்றின. அன்று தொட்டு மக்கள் மனம் பெரிதும், அறம், பொருள் இன்பத்தில் படியாது. வெறும் வீட்டிலேயே படியலாயிற்று. அவர் தம் நெஞ்சில் வீடுஓர் உலகாயிற்று. அதனல் அறம், பொருள், இன்ப ஒழுக்கத்தின் விளைவு வீடு என்ற உணர்வு சுருங்கியது; அன்பொழுக்கம் குன்றியது. அவா ஆட்சி பெற்றது போர்கள் பெருகின."

கடந்த 1800 ஆண்டுகளாக வள்ளுவர் கூறிப் போந்த கோட்பாடுகள், கொள்கைகள் எல்லாம் திரையிடப்பட்டு மூடிக் கிடந்தன. அவர் சைவரா, வைணவரா, அருகரா அல்லது புத்த மதத்தைப் போற்றுகின்றவரா என்ற கேள்விகள் எழுப்பப்பட்டு விவாதங்கள் நடந்தன. அவர் 'சமயக் கணக்கர் மதிவழி செல்லாது உலகியல் கூறிப் பொருளிது என்றவர்' என்பதை மறந்தனர். அவர் காட்டிய சமுதாய அறம், பொருளாதாரக் கோட்பாடுகள், அரசியல் பண்புகள் ஆகியவைகளை விளக்கி மக்களிடையே மறுமலர்ச்சியைத் தூவும் பணி புறக் கணிக்கப்பட்டே போயிற்று

ஆனால் இன்று நிலைமை மாறியுள்ளது. திருக்குறளில் ஆழ்ந்த புலமையும், அது காட்டும் கோட்பாடுகளில் ஆர்வமும் கொண்ட பெருமக்கள் ஆட்சிபீடம் ஏறியுள்ளதால். திருக்குறள் மணம் கமழ்கின்றது. திருக்குறள் தமிழகத்தை வாழ்விக்கும்; உலகத்தையும் உய்விக்கும் என்ற கருத்து வலுப்பெற்று வருகின்றது இந்தியக் குடியரசுத்தலைவர் பண்டாரகர் சாகீர்உசேன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரையில், திருக்குறள் கோட்பாடுகள் இன்றைய உலகத்திற்கு மிகவும் தேவைப்படுகின்றன. திருவள்ளுவர் போதித்த கோட்பாடுகளான, அன்பு. அறம். அருள் மூலமே உலகத்தை அலைக் கழிக்கும் இனப்பூசல், சமயப்பூசல். சாதிப்பூசல், போன்றவைகளுக்கும், நாடுகளிடையே எழும் மற்ற பூசல்களுக்கும், நல்ல தீர்வு காண முடியும் என வலியுறுத்திக் கூறியது முற்றிலும் உண்மை.

## பொது விதி

இன்றைக்கும் சீன மக்கள் கன்பூசியசின் கொள்கைகளில் பிடிப்புள்ளவர்களாக இருக்கின்றனர். மாசே துங்கின் தலைமையில் இயங்கும். பொதுவுடமை அரசு, கன்பூசியசின் கொள்கைகளைச் சிறிது புறக்கணிக்கத் தலைப்பட்டாலும், மக்கள் அவைகளை எளிதில் விடுவதாக இல்லை

வள்ளுவப் பெருந்தகையின் கொள்கைகள் வலுப்பெறத் துவங்கியிருக்கின்றன. இன்னும் சரி, வருங்காலத்திலும் சரி எத்தகைய அரசு அமைந்தாலும், திருக்குறள் காட்டும் நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டே அரசு செயல்பட வேண்டிய சூழ்நிலை மலர்ந்திருக்கின்றது

ஒரு சமுதாயம் சிறப்படைய அச் சமுதாயத்தில் பண்பு நலம் வாய்ந்த பெருமக்கள் நிறைந்திருக்க வேண்டுமென்பது வள்ளுவரும். கன்பூசியசும் கொண்ட கருத்தாகும் அந்த நல்லவர்களும் மக்கள் நலன்களையே எண்ணிச் செயல்படும் பகுத்தறிவுடையவர்களாக இருத்தல் நலம். சமுதாயத்தைப் பிணைத்து வழி நடத்திச் செல்லும் ஒரு பொது விதியை எல்லோரும் விரும்பி ஏற்பது மிகவும் இன்றியமையாதது. பொது விதியை 'அறம்' என்று வள்ளுவரும், 'சங் எங்' (Chung yung - Universal moral order) என்று கன்பூசியசும் கூறுகின்றனர் அத்தகைய பொது விதியை மக்கள் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கேள்வி எழுவது இயற்கையே, விலங்குகளிடையே ஒரு பொது விதி செயல்படும் வாய்ப்பில்லை. "நாம் எல்லாம்

விலங்குகள்- நம்மைப் பிணைத்து வைக்க ஒரு பொதுப் பண்பை உருவாக்குவோம்'' என்று விலங்குகள் கூற இயலாது. வலுத்தவன் வைத்தது சட்டம் என்பதையே நாம் காட்டுச் சட்டம் என்கின்றோம். விலங்குகளிலிருந்து மனிதர்கள் வேறு என்று காட்டுவது மக்கட் பண்பாகும், மக்கட் பண்பு இல்லாதவர்களை குறள் விலங்குகள் என்று கூடக் கூறவில்லை; மரம் போல்வர் என்று உயிரற்றவைகளுடன் ஒப்பிடுகின்றார். வள்ளுவர் மக்கட் பண்பு என்று சொல்வதைக் கன்பூசியசு, மனித இயற்கைச் சட்டம் (The law of human nature or moral law - Tao) என்று விரும்புகின்றார் மக்கட் பண்பே ஒரு பொது விதி தேவையென்று மக்களை உணரச் செய்கின்றது எனலாம்.

அறம் என்று வள்ளுப் பெருந்தகையும், சங்எங் என்று கன்பூசியசும் கூறும் பொது விதியை ஏற்பதில் தன்னலம் குறிக்கிடக் கூடாது. தன்னலத்தை நீக்கிப் பொதுநலம் பேணும் போதுதான் மனிதன் மனிதப் பண்புள்ளவனாக மதிக்கப்படுகின்றான். மனிதர்களின் தன்னலத்துக்குக் காரணமாக இருப்பவை, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாத சொல் ஆகியவைகளாகும். இக் குணங்களைக் கடிந்து ஒதுக்கத் தன்னலம் வீழ்கின்றது: பொதுநலம் ஏற்றம் பெறுகின்றது.

'' அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச்சொல் நான்கும்,
இழுக்கா இயன்றது அறம்'' குறள்,

தன்னை ஆட்டிவைக்கும், ஆசை, சினம், இன்பம் ஆகியவைகளைக் கட்டுப்படுத்திப் பொதுநலம் என்ற பெருஞ் செயலுக்குள் ஐக்கியமாகிவிட வேண்டும். இந்த ஒருமைப்பாடு விளைவிப்பதில் மனிதன் வெற்றிகண்டால், அவன் மிக உயர்ந்த செயலைச் செய்தவனாகக் கருதப்படுவான் எனக் கன்பூசியசு கருதுகின்றார்.

வள்ளுவரும், கன்பூசியசும், மனிதர்கள் எல்லோரும், தன்னலத்தை வென்று பொது விதிப்படி செயல் புரிந்து உயர முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்கள். ஆனாலும் தன்னலம் எந்த அளவுக்கு மனிதனை ஆட்டிப்படைக்கின்றதென்பதை அவர்கள் உணராதவர்கள் அல்ல. மனிதன் பல துறைகளில் வெற்றி கண்டிருக்கின்றான், ஆனால் தன்னலத்தை வெற்றி காண இயலாது மயங்குகின்றான். மனிதனிடையே தன்னலமே மிகுந்து காணப்படுவதால், குறையுடைய சமுதாயத்தைத்தான் காண்கின்றோம்.

என் சாதி, என் இனம், என் மதம், என் சொத்து என்ற சுவர்களை எழுப்பிக்கொண்டு குறுகிய வட்டங்களில் வாழ்கின்றனர் பலகற்றும். உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்ற பொது விதியைத் (அறத்தை) தெரிந்தோ, தெரியாமலோ ஏற்பதில் தயக்கம் காட்டுகின்றனர்,

தன்னலம் என்ற மயக்கத்திலிருந்து மனிதனை மீட்க அறிவு என்ற மருந்து தேவை, மனிதனை அறிவுடையவனாக்குவதன் மூலமே, அவன் சமுதாயத்துக்குப் பயன்படும் பண்புடையவனாக மலர முடியும். அறிவு என்பது வெறும் படிப்பால் மட்டும் பெற்றுவிடக் கூடியதல்ல நாம் கற்பவை அறிவு விளக்கம் பெறத் துண்டுகின்றன நல்லவை எவை தீயவைகள். எவை எனப் புரிந்து தீயவைகளை விலக்கி, நல்லவைகளை ஏற்பதே அறிவு " நன்றின்பால் உய்ப்பது அறிவு " என்று குறள் கூறுகின்றது கன்பூசியசும் அறிவே மனிதனை அன்புடையவனாகவும், அருள் உள்ளம் கொண்டவனாகவும், ஆக்குகின்றது என்றும், நல்லது எது என்று புரியத் துணை செய்கின்றதென்றும் பேசுகின்றார்.

" தம்மில் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கெல்லாம் இனிது "

இக்குறளில் பேராசான் குறிப்பிடும் அறிவுடைமை என்பது மிகுந்த ஆய்வுக்குரியது. பிறருக்குப் பயன்பட வாழ்தல் அறிவுடைமை. பிறர் துன்பத்தைக் களைதல், அறிவின் பாற்பட்டது ஒருவனது அறிவு சமுதாயத்துக்குப் பயன்படவேண்டும். அறிவின் பயன் சமுதாய நலனைப் பெருக்குவதும். சமுதாயத்தைக் கவ்வியுள்ள துயரத்தை நீக்குவதுமாகும்.

" அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
தந்நோய் போல் போற்றாக்கடை. "

என்ற குறளில் அறிவின் பயனை வலியுறுத்தும் பாங்கு நினைத்துப் போற்றுதற்குரியதாகும்.

## சான்றோன் — அறநெறியாளன்

மனிதர்கள், தங்கள் மத்தியில். வாழும் பெருமக்களைப் பின்பற்றி உயர்ந்தவர்களாக ஆகவேண்டுமென வள்ளுவரும், கன்பூசியசும், விரும்புகின்றனர். உலகத்தில் காணப்படுபவைகளை மாயை என ஒதுக்கி, உடலை வருத்த மேலுலகத்தை

நினைந்து, அங்கு உலவுவதாகக் கருதப்படும் தேவர்களை முன்னோடிகளாகக் கொள்ள வேண்டுமென அவர்கள் கூறவில்லை. இவ்வுலகில் வாழும், ஒவ்வொரு மனிதனும், வள்ளுவரும், கன்பூசியசும் போதித்துள்ள அறிவுரைகளை எளிதாக ஏற்றுப் பெருமக்களாக உயரலாம்; அவர்கள் கூறும் நெறிமுறைகள் மிக எளிதாக ஏற்றுக்கொள்ளக் கூடியவை. "மனமிருந்தால் வழியுண்டு" என்பார்கள். மனதில் உள்ள மாசுகளை அகற்றினால், அவர்கள் கூறும் கோட்பாடுகள் மனதில் இயல்பாக இடம்பெறும். "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்" என்பது குறள். கோட்பாடுகள் மனதில் இடம் பெற்றுச், சொல்லும் செயலும் ஒன்று பட்டால் இலட்சியக் குடிமகனாகத் திகழ்வது திண்ணம் அப்படி இலட்சியக் குடிமகனாகத் தன்னை உயர்த்திக் கொள்ளும் பெருமகனை வள்ளுவர், சான்றோன் என்றும், கன்பூசியசு 'அறநெறியாளன்' (சூன்சு—Chunste) என்றும் அழைக்கின்றனர்.

வள்ளுவ ஆசான் காணும் சான்றோனும். கன்பூசியசு கூறும் அறநெறியாளனும், ஆண்டவன் வரம் பெற்றவர்களல்ல. நம்மைப் போன்றே மிகச் சாதாரண மனிதர்கள் தங்கள் முயற்சியால, நல்ல நெறிமுறைகளை விரும்பி ஏற்றுக்கொண்டு அவை வழி செயல்பட்டதன் விளைவே அவர்கள் மக்களால் புகழப்படும் பெருமைக்குரியவராகின்றனர்.

இரு மேதைகளின் கொள்கை வலிவு, மனிதனை மனிதனைக் கொண்டே எடைபோடும் எளிய முறையில அடங்கியிருக்கின்றது. இலின்யூடாங் என்ற சீன அறிஞர் இந்த முறையை "மிகப் பெரும் வலிவான கொள்கை" (The strongest doctrine) எனத் தன் நூலில் வியந்து பேசுகின்றார். The measure of man is man, a doctrine which makes it possible for the common man to begin some where as a follower of Confusianism by merely following the highest instincts of his own humone nature and not by looking for perfection in a divine ideal — The wisdom of Confucuies by din yutang.

பேராசான் கண்ட சான்றோன் நல்லவைகளையெல்லாம் தன் கடன் என்று எண்ணி, அவைகளை ஏற்றுப் பணி புரிகின்றான்.

— தொடரும்.

# சிலம்பு புலம்புகிறது.

பேராசிரியர். கோ தெய்வநாயகம், எம். ஏ.. பி. எசி. டிப்-இன்-அக்.

முன் இதழின் தொடர்ச்சி.

## மங்கலதேவி கோட்டமே கண்ணகி கோட்டமாகும்.

மேலெடுத்தோதிய சான்றுகளால் மங்கல மடந்தை கோட்டமே கண்ணகி கோட்டமாகும் என்பது விளக்கப் பெற்றது. மேலுமிதனை ஏற்றுக் கொள்ளா நிலையில் சிலர், மங்கல மடந்தை கோட்டத்தாங்கண் அணிகயங்களும் சுனைகளுமல்லவா இருந்தன? அருவிகளுடைய பறம்பிலல்லவா கண்ணகியாரைக் குறவர் வழிபட்டனர்? எனவே இரண்டும் ஒன்ருகுமா? என வினவின் விடை நாங்கூறுதுமென்று நாமுரைக்கவில்லை. ஏனெனில் இளங்கோவடிகளே அவ்வாறு ஐயுறுவார்க்குத் தெளிவு தருமுகத்தான், நெடுவேள் குன்றத்தில் வாழ்பவர்களாகிய குறவர்கள் அம்மலைத் தாழ்வரையிலேயே

“ குன்றத்துச் சென்று வைகி
அருவியாடியும் சுனைகுடைந்தும்
அலவுற்று வருவேம் முன்
மலைவேங்கை நறுநிழலின் வள்ளி போல்வீர் ”
— ( 24 : 1 — 13 )

எனத்தம் வாழ்வியற்றெழில்களையும். கண்ணகியாரைக் கண்ணுற்ற பாங்கினையும் கூறுவதாகக் கூறி அந்நெடுவேள் குன்றத் தாழ்வரையின் கண் அருவிகளும் இருந்தன, சுனைகளும் இருந்தன, அணிகயங்களும் இருந்தன, வேங்கை மரங்களும் இருந்தன, செங்கோடுகளும் இலங்கின எனத் தெளிவாகக் குறிப்பிடலான், இச் சேணுயர் சிலம்பின் தாழ்வரையிலேதான் மங்கலாதேவி கோட்டமெனப் பெயரிய கண்ணகி கோட்டம் இருக்கிறது என தொல்லாணை நல்லாசிரியர் இளங்கோ தெரிவித்தார் என்பதனை இப்போழ்தேனுமவர்கள் அறிவார்களாக.

தமிழ்த் தாத்தா உ. வே. சா அவர்களும் “ மங்கலமடந்தை — மங்கலாதேவி ; என்றது கண்ணகியை ” எனக் குறிப்பர் ( பக் 713. அ மு. அ ) மங்கல மடந்தைக் கோட்டத்தாங்கண் ( 30 : 53 ) என்ற தொடரில் மங்கல மடந்தை என்ற சொற்கு மங்கலாதேவி எனப் பொருள் கூறி “ மங்கலாதேவி என்றது கண்ணகியை ” ( பக். 584 ) என்பர்.

எனவே உரைப்பாட்டுமடையில் காணப்படும் 'கண்ணகி தன் கோட்டத்து' என்ற தொடரான கண்ணகி கோட்டமும், மங்கலா தேவி கோட்டமும் ஒன்றேயென வுணர்க.

மேலும் "ஆயிழை கோட்டம்" (30:16) என்பதற்கும் உ. வே. சா. "மங்கலாதேவி கோயில்" (பக் — 585) என்று குறிப்பர். எனவே உ. வே. சா. அவர்களும் கண்ணகி கோட்டம், மங்கல தேவி கோட்டம், ஆயிழை கோட்டம் என அடிகளால் குறிக்கப்பட்ட எல்லாக் கோட்டங்களும் ஒன்றே எனக் குறித்தமை காண்மின்,

உரைப்பாட்டு மடையில் தடமுலைப் பூசலாட்டியைக் கடவுள் மங்கலஞ் செய்த பின்னுள் சேரன் செங்குட்டுவன் கண்ணகி தன் கோட்டத்து மண்ணரசர் திறை கேட்புழி மாமறையோனும் மாடலன் வாயிலாக கண்ணகியாரின் வரலாற்றினைக் கேட்டறிந்ததாகக் காண்கிறோம். இதே செய்தியினைத்தான் வரந்தரு காதையில் ஆயிழைக் கோட்டத்து நிகழ்ந்ததாக அடிகள், "ஆயிழைக் கோட்டத்து ஓங்கிருங் கோட்டியிருந்தோய்" என மாமறையோன் சேரனிடத்துச் செய்தியினைத் தெரிவித்தமையைக் குறிப்பர்.

எனவே உரைப்பாட்டு மடையில் "கண்ணகி கோட்டம்" எனவும் வரந்தருகாதையில் "ஆயிழை கோட்டம்" எனவும் அடிகளால் சுட்டப்பட்ட இடம் ஒன்றே—அதுவுங் "கண்ணகி' கோட்டமே" என்பதனை உணர்க

பின்னொரு கருத்தும் இவண் புலனாகின்றது. அது கண்ணகி கோட்டத்தில் இருந்தே சேரன் ஏனைய அரசர்களை திறை கேட்டான் என்பதேயாம்.

மேலும் மங்கலாதேவி கோட்டமே கண்ணகி கோட்டம் என்பதனை வரலாற்றுய்வோடு தமிழ்ப் பேரறிஞர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் சிறப்பான உரையினைக் கொண்டும் தமிழ்த் தாத்தா உ. வே சாவின் உரை நயங்கொண்டும், பேராசிரியர் சி கோ. கூறியிருக்க, முதுபெரும் புலவர்களின் வாய்மையினை அறியாது "அவ்வாறு உரை கூறிய உரையாசிரியர் யாரோ அறியேம்" எனக் கட்டுரையாசிரியர் எழுதியுள்ளமை வியக்கத் தக்கதே. இவ்வடிப்படையில் "பொன்னஞ் சிலம்பிற், புனை மேகலை வளைக்கை" (வாழ்த்துக் காதை) எனுமடியினை நோக்குவோம். சேரன் செங்குட்டுவன், கண்ணகியினை பிரதிட்டை செய்து வணங்கிய பின் அக்கோட்டத்தின்கண் இருந்தான். அப்போது கண்ணகியார் கடவுள் நல்

லணியினை அவனுக்குக் காட்டினர். அப்போது அவன் குறிப்பிடுவது நிறங்கிளரருவிகளாற் பன்னிற மாகப் பனிக்கும் பொன் போன்ற சேணுயர் சிலம்பாம் நெடுவேள் குன்றத்தின் மீது, விசும்பில், மேகலை, வளை, முற்றிழை பொருந்திய நிலையில் மின்னுக் கொடி போலக் கண்ணகியார் தோன்றினர், என்பதேயாம்.

**ஆங்கொன்று காணாய்; ஈங்கிது காண்**

"பத்தினிக் கோட்டம்" கட்டுரை கண்ட திரு. மெய்கண்டார் "செற்றொடரமைப்பு" எனுங் குறுந் தலைப்பில் விளக்க முற்பட்டுரைத்த

"ஆங்கது கொண்டு போந்தேனாதலின்
ஈங்கிம் மறையோள் தன்மேற் றோன்றி"
(29 : 92 — 93)

எனுந் தொடர்களைத் தெளிவு படுத்துவாம். அதற்கு முன் ஒரு சில சாட்டுகளைக் காணல் வேண்டும்.

நெடுவேள் குன்றப் பறம்பின் தாழ்வரையில் அருவிகளும், சுனைகளும், கயங்களும், கோடுகளும், வேங்கை மரங்களும் நிறைந்துள்ளதாக அடிகள் கூறிய வரலாற்றுண்மையினை மேற் கண்டோம். இனி குன்றக் குரவையில்

ஆங்கொன்று காணாய் அணியிழாய் ஈங்கிதுகாண்
அஞ்சனம் பூழிஅரிதாரத் தின்னிடியல்
சிந்தூரச் சுண்ணஞ் செறியத்தூய்த் தேங்கமழ்ந்
திந்திர வில்லின் எழில் கொண்டிழுமென்று
வந்தீங்கிழியு மலையருவி ஆடுதுமே" (கொளு 1)

எனவரும் பகுதியில், நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரையில் நின்றுகொண்டு இருகுறப் பெண்கள் சொல்லாடுகின்றனர். ஒருத்தி தன் தோழியிடம் "தோழி! அதோ அருவி, இதோ ஒரு அருவி காண்பாயாக", என அருகருகே விழுமபடியான பன்னிறமாகப் பனிக்கும் அருவிகளைக் காட்டி "அவற்றிலிங்கு நமக்கண்மையிலுள்ள இவ்வருவியில் நாம் நீராடுவோம்" எனக் கூறும் முறைமையினை அறிகிறோம். ஆங்கு என்பதற்கு மேலுமோர் விளக்கமாக வழக்காறு ஒன்றைக் காணலாம்

ஒரு தாமரைக் குளத்தருகில் கையில் தாமரை மலரோடு நிற்கும் சிறுவனிடம் இந்தப் பூவினை எங்கிருந்து பறித்தாய்?

என்றால் அவன்கூட அதோ அந்தக் குளத்திலில் பறித்தேன் என அண்மைக் குளத்தைச் செப்புவான் "அதோ அந்த" என அச்சிறுவன் கூறியதால் தாமரைக் குளம் எங்கேயோ ஒரு காதத்திற்கப்பாலுள்ள குளமாகும். எனப்பொருள் கண்டு நாமுரைப்பது எவ்வளவு வன்மையுடையதோ அதே வன்மை பொருந்தியது தான் கட்டுரையாசிரியர், இவ்வடிகட்கு பொருள் காணும் போக்கு. [(எ.டு) அரற்றினென் என்றுங்கு அரசர்க் குரைத்த பின் (— 30 ; 37)

கோட்ட அமைப்பு மேலும் கோட்ட அமைப்பினையும் நாம் புரிந்து கொண்டால் 'ஈங்கு' எளிதாகப் புரியும் [கண்ணகி கோட்ட அமைப்புக்காண பேராசிரியர் சி. கோ அவர்களின் கோட்ட விளக்க வரைபடங் காண்க] கோட்டம் என்பது சிற் சில கோயில்களை உடையதாக நாற்புறங்களிலும் மதில்களால் சூழப்பட்ட பகுதியாம். மதிலுக்குள்; உள்ள கோயில்களுள் தலைமையான தெதுவோ அதன் பெயராலேயே கோட்டம் முழு தும் பெயர் பெறுவது; இன்றளவும் நாம் நங் கோயில்களில் காணுகின்ற அமைப்பேயாம் கோயிலில் எவ்வளவோ தெய் வங்களுக்குச் சிறு சிறு கோயில்கள் இருந்தாலும் எது தலை மையதாக வணங்கப் பெறுகின்றதோ அக்கடவுட் பெயராலேயே கோயிலும் அழைக்கப்படுவது இன்றும் நிலவுங் கொள்கையே எனவே பத்தினி கோட்டத்தில் பல்வேறு கடவுளர்கட்கும் கோட்டங்கள் எடுக்கப் பெற்றன. முற்றங்கள் திருமாளிகை முற்றங்களாக அமைக்கப்பெற்றிருந்தன. இதில் வேங்கைமரம் இருந்த கண்ணகியார் இறந்த இடத்திலேயே அவருக்குக் கோட்டம் எடுப்பிக்கப்பட்டது முதன் முதலாக. பிறகு 'சிமயச் சென்னித்" தெய்வத்திற்கும் கோயில் எடுக்கப்பட்டது. பிறகு பல கோட்டங்களும் எடுப்பிக்கப்பட்டன. இவ்வமைப்பில் தலைமையிடம் பெறுவது பத்தினி வழிபாட்டிற்கான மங்கலதேவியாம் கண்ணகியாரின் கோட்டமேயாதலின் அம் முழு அமைப்பும் மங்கல மடந்தைக் கோட்டம் என்றே யழைக்கப்பட்டது இக் கோட்டத்திலுள்ள கண்ணகியாரை வணங்கிய பிறகு அக் கோட்டத்திலுள்ள முற்றப்பரப்பில் சேரன் இருக்கின்ற போழ்து தான் அவனுக்கும் மாடலன் மறையோனுக்கும் நிகழ்கின்ற உரையாடலில் மறையோன்

"ஆங்கது கொண்டு போந்தேனாதலின்
ஈங்கிம் மறையோன் தன்மேல்"

எனக் குறிக்கின்றான் "குதலை மொழியின் குறுந்தொடி மகளிர் முதியோர் மொழியின் முன்றில் நின்றழ" எனும்படியால் முன்றிலைப் பற்றியறிக. (30 : 114 — 115)

செங்குட்டுவனும் மாடலன் மறையோனும் முதன் முதலாக கோட்டத்திற்கு வருகை புரிந்துள்ளனர். கண்ணகியாரை வழிபட்டபின் அரசன் கோட்ட முற்றத்திலுள்ளான் கண்ணகியாரை வழிபட்டபின் எங்கோ சென்றிருந்த மாடலன் சிறிது நேரங் கழித்துக் கையில் ஒரு கமண்டலத்தோடு வருகின்றான். இந் நிலையில் தேவந்தி ஆவேசித்து சில சொல்லுகிறாள் அதனை விளக்குமுகத்தான் மாடலன் அரசனிடத்தே ஒரு சில கூறுகிறான்.

சிலம்பு காட்டும் பொருள் அரசே! யான் கண்ணகியாரை வழி பட்டபின் இக்கோட்டத்தினை சுற்றிப் பார்க்கச் சென்றிருந்த போது பாசண்டன் ஒரு மறையவனாக, என்முன் தோன்றி ஒரு கமண்டலத்தைக் கொடுத்துச் சென்றான் இந்நிலையில் அவன் இங்கு இம்மங்கல மடந்தைக் கோட்டமாம் கண்ணகிக் கோட்டத்திற்கண்மையில் அருவிகளும், சுனைகளும் மிகுதியாக உள் ளன அச்சுனைகளிலொன்றின் நீர் நம்முடற் மேற்படின் பழம் பிறப்புணர்வோம். அந்நீருள்ள கமண்டலம் தான் உன் கையில் நாங்கொடுத்தது அதனை ஈண்டுள்ள அரட்டன்செட்டி, சேடக்குடும்பி இவர்தம் குறுமகளிர் மீது தெளிப்பாயேயாயின் அவர்களது பழம் பிறப்பை உணரலாம் என தேவந்தியின் மீது ஆவேசித்து "பாசண்டன் யான் பார்ப்பனி தன் மேல் மாடலன் மறையோய் வந்தேன் என நவின்றான்" எனக் கூறி அம் மகளிர் மீது அச்சுனை நீரினைத் தெளித்தான். மிகத் தெளி வாக அடிகளார் இப்பகுதியினை எழுதி ஆங்கு ஈங்கெல்லாம் மங்கல மடந்தைக் கோட்டத்திற்குள்ளேயே நெடுவேள் குன்றத் தாழ்வரையிலேயே அடங்கும் எனத் தெளிவாகக் குறித்தாரே னும் கட்டுரையாசிரியர் திரு. மெய்கண்டார் போன்றோர் படித் தாய்வர் என்பதை உணர்ந்திருப்பாரேயாயின் திரு. மெய்கண் டார் விருப்பப் படியே

"ஈங்கிது கொண்டு வந்தேனாகலில்
ஈங்கிம் மறையோள் தன்மேல் தோன்றி"

எனவே எழுதியிருப்பர் என் செய்வது அடிகளார்க்குப் புலனா காமற் போயிற்று போலும்!!!

எனவே "ஆங்கது கொண்டு போந்தேனாதலிற் ஈங்கிம் மறையோள்" என்பதற்கு திரு. மெய்கண்டார் காட்டும்

" இலக்கியப் போக்கு " முறையிற் பொருள் காணல் வலிந்துரையேயாமென்க.

இருநோக்கு — இவனுண் கண்ணேக்கு இளங்கோ வேண்மாள் சேரன் செங்குட்டுவனிடத்தே கண்ணகியாரை நாம் தெய்வமாகப் போற்றிடல் வேண்டும் என்று கூறிய உடனேயே அவன் " நூலறி புலவரை " நோக்கினன். நூனெறி புலவர் கற்படுத்துவது குறித்து

" ஒற்கா மரபிற் பொதியிலன்றியும்
விற்றலைக் கொண்ட வியன் பேரிமயத்துக்
கற்கால் கொள்ளினும் கடவுளாகும்.
(25 : 117—119)

எனக் கூறி, நீர்ப்படுத்துவதற்காக

" கங்கைப் பேர்யாற்றினும் காவிரிப் புனலினும்
தங்கிய நீர்ப்படை தகவோ வுடைத்தென "

மொழிந்தனர். அவ்வழியே தான் சேரன் செயற்பட்டான் என்பதனை அடுத்தடுத்த கால்கோள், நீர்ப்படைக் காதைகள் தெரிவிக்கின்றன. கலைத்திட்பம் வாய்ந்த புலவோர் கூறிய வழியில் தான் " அறிவுடை யோனுரரசுஞ் செல்லும் " என்பதற்கேற்ப குட்டுவன் செயற்பட்டான் " நூலறி புலவோர் " என்பது இவண் வெள்ளிடையாக நன்னூற் பயிற்சியுடையாராக் காணினும் சிறப்பாக 'தெய்வஞ் சமைத்து வழிபாடு நிகழ்த்துதற்கான மனைகோலும் நெறிமுறைகளை நன்கறிந்துள்ள சிற்பியரையே குறிப்பதாயமைந்துளது "

" கடவுட் பரசலுக்கான " முறைகளையும் நெறிகளையும் அறிந்து ஆற்றக்கூடிய அந்நூலறி புலவரைத்தான் சேரன் நோக்கினன் நோக்கின் குறிப்பறிந்து அவ்வறிஞர் கல்லெடுத்தல், நீர்ப்படுத்துதல் பற்றிய கருத்துக்களைப் புகன்றனர். சேரனின் கண்ணோட்டம் அத்தோடு நிறைவு படுத்தப்படவில்லை சேரனின் கண்ணேக்கால் நூலறி புலவோர் பிறிதொரு செயலையும், சேரன் கூடார் வஞ்சிக் கூட்டுண்டு, வாடா வஞ்சி மாநகர் புக்கு, வடபுலஞ்சென்று, இமயக்கல் கொண்டு கங்கையாற்றுப் படுத்தி வஞ்சி பெயர்ந்த 32 திங்களுக்குள் நிறைவேற்றி வைத்திருந்தனர்.

— தொடரும்

# குறளில் வீட்டியல்

K. சோமசுந்தரம், B. A. B. L., தஞ்சை.

உலகியலை முப்பாலாக வகுத்த வள்ளுவர் ஒப்பில்லா வீட்டியலைக் குறிக்க. முப்பொருளாகிய உயிர் (பசு) இறை (பதி) தளையாய பாசத்தை உணர்த்தும் வகையால் துறவு. மெய்யுணர்தல். அவாவறுத்தல் என்ற மூன்று அதிகாரங்களில் அம் மூன்றினையும் முறையே வரையறை செய்து குறணூலை அறிவு நூலாகவும் உணர்வு நூலாகவும் திகழ வைத்தார். முப்பாலின் திறத்தினைப் பற்றிக் கூறும் குறளின்கண் வீட்டியலைப் பற்றிய குறிப்புகளும் உளதாதலைப் புலனுக்க. திருவள்ளுவரை 'முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்' என்று கீரந்தையாரும். 'அறம் பொருளின்பம் வீடென்னும் நான்கின் திறந்தெரிந்து செப்பிய தேவு' என்று மாமூலனாரும். 'அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின் திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்' என்று கொடி ஞாழன் மாணிபூதனாரும் கூறியுள்ளது அறிதற்பாற்று. இதனுன் வீடென்னும் பொருள் பற்றித் தெளியக் கூறும் நூல் குறளென்பதாயிற்று, மற்றும் 'பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்பதறிவு' என்று திருவள்ளுவர் அருளியதால், வாழ்க்கையின் நோக்கம் மெய்யுணர்வு கைவரப் பெறுதலென்பதும், வீடுறுதற்கேதுவாயிருப்பது மெய்ம்மை தெளியச் செய்யும் மெய்யுணர்வும், சிறப்பாக உள்ளதை ஊகிக்கும் அறிவும் என்பதும் இனிதுணரப்படும்.

வீடென்பது வாக்கு மனங்கட்கு எட்டாதது. வீட்டின் தன்மையினையும். வீடுற்றுருறும் பேரின்ப நிலையினையும் இற்றென வுணர்த்தல் இயலாதாதலான். உரையாசிரியர் பரிமேலழகர் 'வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாதலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம் என அருளியதினுன். துறவறத்துள் வீட்டியலைப் பற்றி வள்ளுவர் குறிப்பாகக் கூறியது ஒருவாறு தெளியப்படும். அகத்தியனாரும், தொல்காப்பியனாரும் வீடு பேற்றிற்கு நிமித்தங் கூறுதலன்றி, வீட்டின் தன்மை இலக்கணத் தாற் கூறுரென்று உணர்க அஃது 'அந்நிலை மருங்கின்'... என்பதினுன் உணர்க இக்கருத்தானே வள்ளுவ நாயனாரும் முப்பாலாகக் கூறி மெய்யுணர்தலான் வீடு பேற்றிற்கு நிமித்தங் கூறினர்' என ஆசிரியர் நச்சினார்க்கினியர் மொழி வாராயினர்.

அந்நிலை மருங்கினற முதலாகிய மும்முதற் பொருட்கு முரிய வென்ப' எனும் தொல்காப்பியச் சூத்திர உரையுள் 'வீடென்

பது செய்யுளுள் வாராதோ வெனின் அறமுதலென்பது புறப் பாட்டெல்லையாகக் கூறினனென்பார் நான்கு பொருளுந் தழீஇ யுரைப்ப. இனி ஒரு சாரார் மும்முதற் பொருட்குரிய வென்பதனை எச்சப்படுத்திக் கொள்ப, அற்றன்று, உலகியற் பொருண் மூன்றனையுங் கூறுவான் அவற்றை மும்முதற் பொருளென்றான்: அவையின்றி வீடு பெறுமாறு வேறின்மையின் வீடும் ஆண்டுக் கூறினனென்பது, அல்லாதார் வீடென்னும் பொருண்மை செய் யுட்கண் வாராமையின் அது கூறானென்ப. அங்ஙனங் கருதின் அறமுதற் பொருளுஞ் செய்யுட்கண் வாராவென மறுக்க 'என்பர் பேராசிரியர்,' மும்முதற் பொருளெனவே, அவற்றது துணைப் பொருளாகிய அறநிலையின்மையும், பொருணிலையின்மையும். இன்பநிலையின்மையும் அடங்குமென்ப உலகியற் பொருண் மூன்றனையும் இவையெனக் கூறி அவற்றை விடுமாறுங் கூறவே, வீடு கூறிற்றாம் என நச்சினார்க்கினியர் நவின்றுள்ளார். எனவே உரையாசிரியர்களின் கூற்றினை நன்கு ஆயுங்காலை. குறளை வீடென்னும் பொருளொளியினைப் பற்றிக் கூறும் அறிவு நூலெனல் சாலவும் பொருத்தமே யென்பதூஉம் பெறப்படும்.

அறம் பொருள் இன்பம் எனும் மும்முதற் பொருள்வழி வீட்டுண்மை பெறப்படுவதால், வீடு அவை மூனறிலும் விரவிப் பொலிந்து நிற்பதை வள்ளுவர் தம் முப்பால் நூலில் பொருளையும் இன்பத்தையும் அறத்தொடு வழிப்படுத்தும் வகையான், பரவலாகக் காட்டியுள்ளார் மற்றும், அறம் பொருள் இன்பமாகிய மெய்வாழ்வில் அவற்றின் நிலையின்மையறியும் வாய்ப்புடனே அவற்றை அறவே விடுத்து அவற்றினின்றும் விடுதலையடைவது வீடாதலின், வீடென்பது அறம் பொருள் இன்ப வாழ்வில் முகிழ்த்த பயனாகும், இத்தகைய செந்நெறி வாழ்வின் பயனாகிய பொருண்மையினை 'வீடென்று பாயிரம்' (சிறுமேதாவியார்) என்ற இயலிலும் வீடு பயக்க வல்ல அறிவு விளக்கத்தினை நல்கும், நிலையாமை, துறவு மெய்யுணர்வு, அவா வறுத்தல் என்பனவற்றை அதிகாரமாகக் கூறும் துறவறவியலிலும் வள்ளுவர் விளக்கியுள்ளார். எனவே, மெய்யின்பத் திருவோடு மெய்யாய வாழ்வியல் முறையில் நிற்கும் திருவாளருக்கு வீட்டையுணர்த்தி அன்னவருக்கு உறு கருவியாக துணை புரிந்து வாழ்க்கைப் பேற்றினை இறைவாழ்வொடு கூட்டி அளிக்க வல்லது வள்ளுவரது குறணூலாகுமென்பது கருதற் பாற்று.

உயிர்களுக்கு முழு முதல்வனாகிய கடவுள் பால், அவ்வுயிர்கள் சார்ந்து கூடி ஒன்று கலப்பது வீடு பேறாகும், வீடு பெறுவதே மக்கட் பிறவி எடுத்த பயனென்க, காணப்பட்டதாகிய

உலகத்தைக் கொண்டு அதனைத் தோற்றுவித்து காணப்படாது நிற்கும் ஒருவரது இருப்பை நிலை நிறுத்த வேண்டிய நியதியால். ஆதி பகவன் முதற்று உலகு என வள்ளுவர் கூறி. இறைக்குரிய தலைமை யியல்பைச் சுட்டியுள்ளார்.

அகர முதல எழுத்தெல்லாம்: ஆதி
பகவன் முதற்றே யுலகு

ஆதி யெனும் சொல் உலகத் தோற்றத்தின் மேற்று. இது தொடக்கம். முதல். பழமை யெனும் பொருளுடையதாய் இறையின் படைப்புத் தொழிலினை குறிப்பாக விளக்கி நின்றுள்ளது. உலகு எனும் சொல் உலகின்கண் வாழும் உயிர்ப்பன்மையினை உணர்த்திற்று. எனவே 'ஆதி பகவன் முதற்றே யுலகு' என்றதினுன். ஆதி பகவன், உலகு. உலகத் துயிர்கள் எனும் முப்பொருளுண்மை விளக்கப்பட்டது காண்க

இறைவனது தலைமையியல்பின் உண்மையினை நிறுவுதற்கு நாதமாகிய ஆதி அகரத்தையே ஆசிரியர் வள்ளுவர் எடுத்துக் காட்டி இறை அகரம் போலும் உயிர் என்ருர் 'அகாரம் உயிரென்றறையலுமாமே' என்பதும் 'அகார முதலாய் அனைத்துமாய் நிற்கும்' என்பதும் திருமந்திர வாக்குகள். 'அக்கரங்களின்ரும் அகரவுயிரின்றேல்' என்பது மெய்கண்டாரின் அருள் மொழி. 'அகரவுயிர் போல் அறிவாகி எங்கும், நிகரிலிறை நிற்கும் நிறைந்து' என உமாபதி சிவமும் 'அகரம் முதலின் எழுத்தாகி நின்ருய்' என ஆளுடை நம்பிகளும் அருள்வாராயினர். மற்றும் உலகத் துயிர்கள் மெய்போலும் உடல் எனக் கொண்டு, வள்ளுவர் உலகுயிராகிய இரு பொருள்களும் இறைவனுக்கு உடலாகும் பெற்றிமையால் உலகென ஒன்றுபடுத்திக் கூறியுள்ளார். 'அகர முதலவெழுத்தெல்லாம்' என்ற வழி இரண்டு பொருள் வேறு வேறு கூறியதன்றி அகர முதல எழுத்தெல்லாம் அதுபோல என்ருனும், ஆதி பகவன் முதற்று உலகம் அதுபோல என்ருனும் ஒன்ருகத் துணியு மாற்ருன் உவமையும் பொருளும் கூருமையின் வேறுபட வந்த உவமையாயிற்று' என்பது பேராசிரியர் கூற்று இதன் வாயிலாக இறைவனுக்கும் உலகத்துயிர்களுக்கும் உள்ள சம்பந்தம் உயிர்மெய்யெழுத்து போன்றதென்பது தெளியப்படும். நமது உடலுக்குரிய பெயர் மெய்யென்பதாகும் உயிரின்றி மெய்பிறவாது, அம்மெய்யுடன் உயிர் பிரிவின்றி நிற்றலைக் கண்ட வள்ளுவர் இறைவனது சூக்கும நிலையினைச் சித்தாந்தப் படுத்தியுள்ளார்.

— தொடரும்.

# புகுமுகவழிப் புலவர் மாநிலத் தமிழ்க் கழகம்

சிறப்புத் தலைவர் : டாக்டர். வ. சுப மாணிக்கம்

செயலாளர் : புலவர். சோம. இளவரசு

உலக மொழிகளுள் இன்றுவரை நின்று நிலவும் அன்னைத் தமிழை வளர்க்கவும் உயர்த்தவும் பரப்பவும். தமிழ் நூல்களைப் போற்றவும், தமிழ்ப் புலவர்களுக்கு வேலை வாய்ப்புப் பெருக்கவும் சிறப்பாகப் புலவர் புகுமுகம் படித்துப் புலவர் பட்டம் பெற்றவர்களின் பெருமையையும் நலன்களையும் காக்கவும் புகுமுகவழிப் புலவர் மாநிலத் தமிழ்க் கழகம் இன்று தி. வ. 2000 புரட்டாசி 22வ (9—10—75) அமைக்கப் பெறுகின்றது.

## குறிக்கோள்கள்

1. புகுமுகவழிப் புலவர்கள், பள்ளியிறுதியாண்டு (S. S. L. C) வழிப் புலவர்களுக்கு ஒப்ப முன்போலவே ஒத்த உரிமையும் ஒத்த மதிப்பும் பெறுதல்.

2. புகுமுகவழிப் புலவர்கள் ஆசிரியப் பயிற்சி வகுப்பில் முன்போல் இடம் பெறுதல். (இதற்குத்தக அரசாணையை முன்னிருந்த நிலைக்கு மாற்றச் செய்தல்)

3. உயர்நிலைப் பள்ளிகளில் இருப்பது போலவே தொடக்கப் பள்ளியிலும் நடுநிலைப் பள்ளியிலும் தமிழ் கற்றுக் கொடுப்பதற்கெனத் தமிழாசிரியர்கள் அமர்த்தப் பெறல்.

4 தமிழாசிரியர்கள் எந்தப் பள்ளியில் (தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி. உயர்நிலைப்பள்ளி) வேலை பார்க்கின்றார்களோ அந்தப் பள்ளிகளில் ஏனைய ஆசிரியர்களுக்கு ஒப்ப அரசினர் ஊதியம் தருவதைப் பெற்றுக் கொள்ளுதல் இதற்குத் தக அரசாணையை மாற்றச் செய்தல்.

(தமிழ் கற்றவன் பசித்துக் கிடந்து தமிழை நோவாது எப்பள்ளியிலாவது பணியாற்றும் ஒரு வாய்ப்பு உடனே பெறவேண்டும் என்பதும். வேலையிடங்களை எண்ணிறந்தவர்களுக்குப் பெருக்க வேண்டும் என்பதும் இதன் கருத்து).

5. புலவர் என்ற படிப்பே ( Degree ) திகிரியாமாறும் புலவர் என்ற இனிய எளிய வழக்காருன தமிழ்ச் சொல்லே திகிரிப் பெயராமாறும் செய்தல்.

6. கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக எடுத்துப் படிக்கும் பிற துறை மாணவர்களுக்குப் பாட நூல்கள் இலவசமாகப் பெறத் தமிழக அரசு நிதியுதவி செய்வது போலத் தமிழையே முழுமையாக எடுத்துப் படிக்கும் தமிழ் மாணவர்கள் பாட நூல்கள் இலவசமாகப் பெற அரசினர் நிதியுதவி பெறுதல்.

7. பல்கலைக் கழகங்கள் முன் போல் புலவர் புகுமுக வகுப்புத் தேர்வுகளை நடத்தி வரவும், அங்ஙனம் தேர்ந்தவர்களைப் புலவர் வகுப்பில் முன்போல் யாதொரு தடையுமின்றிச் சேர்த்துக் கொள்ளவும் செய்தல். இதற்கேற்பப் பல்கலைக் கழகங்களின் விதியை முன் இருந்த நிலைக்கு மாற்றச் செய்தல்.

(புகுமுக வகுப்பு மாணவர்களும் புலவர் வகுப்பில் சேரலாம் என்று முன்பு இருந்ததனை ஒழித்துப் பள்ளியிறுதித் தேர்வு பெற்றவர்களே புலவர் வகுப்பில் சேரலாம் என்று கொண்டுவந்த புதுவிதி தமிழின் பெரு வளர்ச்சிக்கு உகந்தது இல்லை எனவும் இந்நாட்டு மொழியாகிய தமிழைப் படிக்க விரும்புகின்றவர்களுக்கு எளிய நுழைவாயில் தர வேண்டுமெனவும். பள்ளியிறுதித் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பல்கலைக் கழக முன்னிலை வகுப்புகளில் சேர்வது கூட மிகக் குறைந்து வருதலின் அன்னோர் தமிழ்ப் புலவர் வகுப்பிற்கு வந்து சேர்வர் என எதிர்பார்த்தல் இயலாது எனவும் இக்கழகம் கருதுகின்றது. அயல் முறைக் கல்வி ( Informal Education ) வேண்டும் எனத் திட்டம் வகுக்கும் இக்காலத்து, பலர் தமிழ் படிப்பதற்கு வாய்ப்பாக இருந்த புகுமுக நுழைவாயிலை எடுக்கலாமா? நாற்பது ஆண்டுகளாகத் தமிழ்ப் புலவர் வகுப்பிற் சேர்ந்து தமிழை வளர்க்க வந்தவர்களிற் பெரும்பாலோர் புகுமுகம் பயின்றவர்கள் என்பதனை மறந்து விடவேண்டாம் பரந்த தமிழ் வாய்ப்புக்குப் புகுமுக வழியையும் வைத்துக்கொள்ளவேண்டும். தமிழுக்கு உள்ளதை எடுப்பது எளிது. மீண்டும் கொண்டு வருவது அரிது )

## நடைமுறை

1. புகுமுகவழிப் புலவர்கள் அனைவரும் உறுப்பினராதற்கு உரியர்.

2. புகுமுகத் தேர்வு பெற்று இப்போது புலவர் பயிலும் மாணவர்களும் உறுப்பினராதற்கு உரியர்.

3. அரசியல் நோக்கு வேலைநிறுத்தம், பிற ஆரவாரம் என்றினைய போக்கின்றித் தமிழ் நோக்கு ஒன்றே கொண்டு தகுதியான முறையில் குறிக்கோள்கள் நிறைவேற்றுதற்கு உரிய வழிமுறைகளை ஆராய்ந்து செயற்படுதல்.

4 உறுப்பினர் பொதுக் கட்டணம் உருபா 5/- வேலையின்றி இருப்பவர்களுக்கு உறுப்பினர் கட்டணம் நீங்கலாகத் தனிக்கட்டணம் உருபா 20/-.

5. அன்பர்களிடம் நன்கொடை பெறுதல்

## அமைப்பு

செயற்குழு என்பதோர் அமைப்பே உண்டு இக்குழுவில் சிறப்புத் தலைவர், செயலர், துணைச்செயலர், உறுப்பினர் ஐவர் என எண்மர் இருப்பர். இக்குழு வேண்டும்போது கூடி நடைமுறைகளை விதித்துக் கொள்ளும் குறிக்கோளைச் செவ்வனம் நிறைவேற்ற ஆவன செய்யும் குழுவில் செயலர் முதலான அனைவரும் சிறப்புத் தலைவர் வழிகாட்டுவதன்படி நடந்து கொள்வர் அவர் முடிவை ஏற்றுக் கொள்வர். புகுமுகவழிப் புலவர்கள், செயலரோடு தொடர்பு கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| சிறப்புத் தலைவர் | டாக்டர் வ. சுப. மாணிக்கம்<br>கதிரகம், காரைக்குடி |
| செயலர் | புலவர் சோம. இளவரசு<br>அண்ணாமலை நகர் |
| துணைச் செயலர் | புலவர் முருக. நடராசன் |
| உறுப்பினர்கள் | புலவர் தெ. முருகேசன் |
| | புலவர் சிவ. சுப்பிரமணியன் |
| | புலவர் பா. சுப்பிரமணியன் |
| | புலவர் மு. சுப்பிரமணியன் |
| | புலவர் க. இமயவரம்பன் |

இடம்: 32. மாலைகட்டித் தெரு. சிதம்பரம்,
தென்னார்க்காடு மாவட்டம்

# கலைமகள் விழா

நமது கரந்தைத் தமிழ்ச் சங்கம் 13—10—75 ஆம் நாள் கலைமகள் விழாவை மிகச் சிறப்புடன் நிகழ்த்தியது. திருவையாறு அரசர் கல்லூரிப் பேராசிரியர் புலவர் வி. அ. அரங்கசாமியவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று சங்கப் பணிகளின் சிறப்பையும் தமிழின் தொன்மையான தொல்காப்பியம் போன்ற நூல்களையும் திரிபுபடப் புத்தாய்வு செய்வதாகக் கூறிச் சிலர் வழுக்களைப் பரப்பிவரும் நிலையைக் கழறி சங்கம் உயரிய முறையில் மேலும் செயலாற்ற வேண்டுமென்றார். விழாவை அறிமுகப்படுத்திச் சங்கப் பொருளாளரும் கல்வி நிலையங்களின் தாளாளருமான திருவாளர் ச. சுந்தரம் பி. ஏ., பி. எல்., அவர்கள் அனைவரையும் வரவேற்று வழக்கம் போல் நிகழும் கலைமகள் விழாவின் இவ்வாண்டுச் சிறப்பு நிகழ்ச்சிகளைச் சுட்டிப் பேசினார்கள்.

சிறப்புச் சொற்பொழிவாற்றிய குடந்தை அரசினர் மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை திருமதி பா. மங்கையர்க்கரசி எம். ஏ. அவர்கள் இலக்கியத்தில் மகளிர் என்ற தலைப்பில் சங்க கால முதலாக இக்கால வரையுள்ள இலக்கியங்களில் காணப்பெறும் மகளிர் பற்றிய மாண்புகளையும் முதன்மையையும் பற்றிக் கூறினார்கள். பின்னர் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியை திருமதி ப. நீலா அவர்கள் சொற்காத்த பொற்பாவை என்னும் தலைப்பில் பெரிய புராணத்தில் வரும் மகளிரின் சிறப்பையும் தமிழகம் மகளிர்க்கு அளித்துள்ள அளித்துவரும் உயர்வையும் பற்றி விளக்கிப் பேசினார்கள். விழாத் தலைவர் நிறைவுரைக்குப் பின் சங்க நிறைவேற்று கழக உறுப்பினர் திருவாளர் ச. இராமநாதன் அவர்கள் இவ் இயற்றமிழ் நிகழ்ச்சிகளுக்கு நன்றி கூறினார்கள்

பின்னர்க் குழந்தைகள் இல்லத்துக் குழந்தைகள் குழு நடனமும் இராதாகிருட்டினத் தொடக்கப்பள்ளிச் சிறுவர் சிறுமியரின் நாட்டியக் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன. பின்னர் உமா மகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர்களால் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் இலக்கிய வரலாற்று நாடகமும் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்களால் — மானவீரன் மதுரை என்னும் வரலாற்று நாடகமும் மிகச் சிறப்பாக நடத்தப் பெற்றன. நாட்டு வாழ்த்து சங்க வாழ்த்துடன் விழா இனிது நிறைவுற்றது.

# உமாமகேசுவர உலகச் செயற் கழகத் தொடக்க விழா தலைவர் பொறுப்பு ஏற்பு விழா

கடந்த செப்டம்பர் திங்கள் 21-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11-30 மணிக்கு உமாமகேசுவர உயர் நிலைப்பள்ளியின் ''உலகச் செயற் கழகத் தொடக்க விழாவும்'' ''தலைவர் பொறுப்பு ஏற்பு விழாவும்'' சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் நடைபெற்றன. கூட்டத்திற்குச் சங்கச் சான்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும். அரிமா சங்கத் தலைவரும், செயலாளரும், மாணவ மாணவியரும் திரளாக வந்திருந்து சிறப்பித்தனர்

தலைமையாசிரியர் திரு N பாலசுப்பிரமணியம், B.A., B.T., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள் Rtn டாக்டர், A. சுப்பிரமணியன், M.S., அவர்கள். பள்ளித் தாளாளர் திரு. ச. சுந்தரம், B.A., B.L., அவர்களை அறிமுகம் செய்து, அவரது சீரிய குணங்களையும் சிறந்த தொண்டுகளையும் உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளியில் 'உலகச் செயற் கழகம்' அமைப்பதற்கு அனுமதி வழங்கிய ஆன்ற பண்பினையும் அழகாக எடுத்துப் போற்றி யுரைத்தார்கள். விழாக்களுக்கு மாநில சுழற் கழக ஆளுநர் Rtn டாக்டர் C R R பிள்ளை அவர்கள் தலைமை தாங்கிப் பள்ளியையும், கழகத்தையும், பள்ளித் தாளாளர் அவர்களையும் வாழ்த்தி அரியதோர் உரை நிகழ்த்தினர்கள்.

இக்கழகத்திற்கு அன்பும் பரிவும் காட்டிவரும் Rtn. PP. R. வேங்கட நாராயணன் அவர்கள். செயற்குழு உறுப்பினர்களை அறிமுகம் செய்து வைத்தார்கள். மாவட்டச் சுழற் கழகத் தலைவர் Rtn R. சுப்பையா அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திக்கற்ற மாணவர் இல்லத்திற்கு நன்கொடை வழங்க அதனை திரு S வரதராசன். B.Sc. B.Ed., அவர்கள் பெற்றுக் கொண்டார்கள் Intr. S இராசேந்திரன் என்ற மாணவருக்கு விழாத் தலைவர் அவர்கள் தலைமைச் சின்னத்தை அளிக்க, அவர் தலைமைப் பொறுப்பேற்று இனிது நடத்தினர். ஓய்வு பெற்ற ஆசிரியப் பெருமக்களான புலவர் திரு. த. நா. அரங்கநாதன் அவர்களையும். ஓவிய ஆசிரியர் திரு S சந்திரன் அவர்களையும் புலவர் திரு. மீனா. இராமதாசன் அவர்கள் பாராட்டிப் பரிசுகள் வழங்கினர்கள். புதிதாகப் பணியேற்ற ஆசிரியர்

களான திரு T. சச்சிதானந்தம், B SC., B Ed., புலவர் திரு. M. முருகையன், ஓவிய ஆசிரியர் திரு. M. சண்முகவேலு ஆகியோரைத் திரு. V. இராசகோபால் B. A. B. T., அவர்கள் வரவேற்றுப் பரிசுகள் வழங்கினார்கள். கல்வித் துறையில் அதிக மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெற்ற திரு. N S. இராசேந்திரன் என்ற மாணவனைத் திரு. D. கண்ணன், B A, B. T, அவர்கள் பாராட்டிப் பரிசு வழங்கினார்கள் விளையாட்டுத் துறையில் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் சிறந்த சாதனைகளை ஏற்படுத்திய திரு. அறிவழகன், செல்வி. பாரதி நங்கை, திரு. குமார் ஆகியோரைத் தாளாளர் திரு.ச. சுந்தரம் B. A., B L., அவர்கள் வாழ்த்திப் பரிசுகள் வழங்கினார்கள். Rtn. G. நாகப்பிள்ளை அவர்கள் பூப்பந்து விளையாட்டுக்கான சுழற்கேடயத்தைத் திரு. M. சந்தானகிருட்டினன் P E. T., அவர்களிடமும், கோ கோ விளையாட்டுக்கான சுழற் கேடயத்தைத் திரு. V. N. செல்வராசு P E T., அவர்களிடமும் வழங்கினார்கள்.

நடப்பு ஆண்டின் செயல்முறைத் திட்டங்களைச் செயலர் Intr. R. சோமசுந்தரம் வாசித்தார். இதர உலகச் செயற் கழகத் தலைவர்கள் தத்தம் அறிக்கைகளை வாசித்த பின்னர் ஆசிரியர் வழிகாட்டி திரு. R. இராமமூர்த்தி B SC, B. Ed., அவர்கள் நன்றி நவில நாட்டு வாழ்த்துடன் விழாக்கள் இனிது நிறைவுபெற்றன

# இராதாகிருட்டின மாணவியர் செயற் கழகத் தொடக்க விழா

21—9—75 ஆம் நாளன்று உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளியில், மாநில செயற்கழக ஆளுநர் அவர்களின் இசையும் வாழ்த்தும் பெற்று "இராதாகிருட்டின மாணவியர் செயற் கழகம்" தொடங்கப் பெற்றது. தலைவராக செல்வி G. மணிமொழியும், செயலாளராக செல்வி R. செண்பகமும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

# கையறவு

நமது கரந்தைத் தமிழ்ச் சங்க ஆயுள் உறுப்பின ரும், புரவலரும், தமிழ்ப் பொழில் ஆயுள் உறுப்பினரும், முன்னாள் சென்னை சட்ட மன்ற மேலவை உறுப்பினரும், பெரும் வணிகருமான திருச்சிராப்பள்ளி — திருவாளர் T. துரைராச பிள்ளை அவர்கள் 14—10—75 செவ்வாய்க் கிழமை இரவு 7 மணியளவில் இயற்கை எய்தியமை அறிந்து ஆற்ரெணுத் துயருற்ரேம் இவர் தம் பிரிவு நம் சங்கத்திற்கு ஒரு பேரிழப்பாகும். இவரை இழந்து ஆற்ருது வருந்தும் இவர் தம் குடும்பத்தார், உற்ருர் உறவினர் முதலாஞேரின் துன்பத்தில் பங் கேற்று எங்கள் ஆழ்ந்த வருத்தத்தினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம். இவர் தம் இன்னுயிர் நல்லமைதி யுறுவதாக